## III. மகாவங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

1961ம் ஆண்டிற்கான மகாவங்கியின் நிதிக்கணக்குகள் பின்னிணைப்பு II அட்டவணை 6ல் கொடுக்கப்பட்டுள்ளன. 1960ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்கள் பின்வருமாறு:-

| | மாற்றம் | |
|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் |
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் .. .. .. | +128·3 | + 15·0 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள் .. .. .. | +119·2 | + 18·5 |
| கேள்வி வைப்புக்கள் .. .. .. .. | + 9·1 | + 4·3 |
| (இதில் வர்த்தக வங்கிகள்) .. .. .. .. | — 53·6 | — 38·2 |
| சர்வதேச ஒதுக்குநிதி .. .. .. .. | — 5·5 | — 2·9 |
| உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் .. .. .. | +142·4 | + 18·2 |
| அரசாங்கப் பிணைகளும், உத்தரவாதப் பிணைகளும் .. .. | +140·9 | + 24·8 |

+ஏற்றம்
—இறக்கம்

சர்வதேச ஒதுக்குநிதியை நாணயம், கேள்வி வைப்புக்கள் ஆகிய பொறுப்புக்களின் விகிதாச்சாரமாக நோக்கின், இவை 1960ம் ஆண்டு முடிவிற்குரிய 22.2 சதவீதத்திலிருந்து, 1961ம் ஆண்டு 18.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றன.

மகாவங்கியின் ஐக்கிய அமெரிக்க டொலர் மாற்று விகிதம் வங்கியின் ஸ்டேர்லிங்-டொலர் விகித மாற்றங்களுக்கேற்ப காலத்திற்குக் காலம் (பின்னிணைப்பு I (ஆ)ல் தரப்பட்டபடி) மாற்றப்பட்டது.

மகாவங்கியின் ஸ்டேர்லிங், இந்திய ரூபாய் மாற்று விகிதங்களில் இவ்வருடம் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. இவ்விகிதங்களாவன:-

| | தந்தி மாற்றுக் கொள்வனவு | தந்தி மாற்று விற்பனவு |
|---|---|---|
| ஸ்டேர்லிங் (இலங்கை ரூபாய்க்கு) | | |
| உடனடி | .. 1 சி. 6 3/64 பெ. | .. 1 சி. 6 1/32 பெ. |
| எதிர்கால (ஆறு மாதங்கள்வரை) | .. உடனடிக்கு எதிராக 1/128 பெ. மாதாந்த கழிவு. | .. உடனடிக்கு எதிராக 1/128 பெ. மாதாந்த அதிக விலை. |
| இந்திய ரூபாய்கள் | | |
| உடனடி | .. ரூ. 99 3/4 | .. ரூ. 99 13/16 |
| எதிர்கால (ஆறு மாதங்கள்வரை) | .. உடனடிக்கு எதிராக ரூபாயில் 1/32 மாதாந்த கழிவு. | .. உடனடிக்கு எதிராக ரூபாயில் 1/32 அதிக விலை. |

மகாவங்கியின் மொத்த அந்நிய நாணய நடமாட்டங்கள் அட்டவணை 10ல் காட்டப்பட்டுள்ளன. உடனடிக் கொள்வனவுகள் ரூபாய் 3421 இலட்சமாகவும், உடனடி விற்பனவுகள் ரூபாய் 5031 இலட்சமாகவும் இருந்தமை, 1960ம் ஆண்டில் அவை முறையே, ரூபாய் 1623 இலட்சமாகவும், ரூபாய் 4987 இலட்சமாகவும் இருந்தமைக்கு ஒப்பிடத்தக்கது. எதிர்காலக் கொள்வனவுகள் சம்பந்தமாக ஒப்பந்தம் செய்யப்பட்ட பெறுமதி 2218 இலட்சம் ரூபாய்களாகவும் (1960ம் ஆண்டில் 2185 இலட்சம் ரூபாய்கள்), எதிர்கால விற்பனவுகளின் பெறுமதி 616 இலட்சம் ரூபாய்க

ளாகவும் (1960ம் ஆண்டில் 1425 இலட்சம் ரூபாய்கள்) இருந்தன. கடந்த ஆண்டின் இறுதியில் வெளிநின்றவைகளும் உட்பட்ட எதிர்கால கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் ஒப்படைக்கப்படவேண்டிய தொகை 2305 இலட்சம் ரூபாய்களாகவும், எதிர் கால விற்பனவு ஒப்பந்தங்களின்கீழ் ஒப்படைக்கப்படவேண்டிய தொகை 744 இலட் சம் ரூபாய்களாகவும் இருந்தன. ஆகவே மொத்தக் கொள்வனவுகளின் தொகை (உடனடியாகவும் எதிர்கால ஒப்பந்தங்களின் கீழும் ஒப்படைக்கப்படவேண்டிய தொகை) 5726 இலட்சம் ரூபாய்களாகவும், மொத்த விற்பனவுகள் 5775 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன.

நாணய வெளியீடு: மகாவங்கி உலோகத்தினுற் செய்த நூல் அடங்கிய 10 ரூபாய், 5 ரூபாய், 2 ரூபாய், 1 ரூபாய் ஆகியஇனங்களைச்சேர்ந்த நாணயத்தாள்களை இவ்வாண்டில் முதன்முறையாக வெளியிட்டது. முன்னர் வெளியிடப்பட்ட இவ் வினங்களைச் சேர்ந்த நாணயத்தாள்கள் இப்புதிய தாள்களுடன் ஒருங்கே தொடர்ந்து நடமாட்டத்திலிருந்து வருகின்றன.

வருமானமும் செலவும்: இவ்வருடத்திற்கான மகாவங்கியின் வருமானம் ரூபாய் 243,88,121.41 சதமாக இருக்க, நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 38ம் பிரிவி லுள்ளபடி நியமிக்கப்பட்ட ரூபாய் 110,92,487.89 சதமான ஒதுக்குநிதியுட்பட்ட செலவுகள், ரூபாய் 193,88,121.44 சதமாக விளங்கின. 1961ம் ஆண்டு, மார்கழி முடிவில் உள்ளபடியான வங்கியின் மொத்த மூலதனக் கணக்குகள், வங்கியின் மொத்த இருப்புச் சொத்துக்களுக்கும், அந்நிய நாணயங்களாக உள்ள இருப்புச் சொத்துக்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமையில், 15 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தமையால், நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 39 (ஆ) பிரிவின்படி, வங்கியின் நிகர ஆதாயமான ரூபா 50 இலட்சமும் மூலதன மிகையில் வரவு வைக்கப்பட்டது. தற்போதுள்ள மூலதன மிகையின் தொகை 300 இலட்சம் ரூபாய்களாகும்.

வங்கி மேற்பார்வைப் பகுதி: 1961ம் ஆண்டில் வங்கி மேற்பார்வைப் பகுதி, நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 29 (1) பிரிவின்படி இரண்டு வர்த்தக வங்கிகளை யும், அச்சட்டத்தின் 29 (2) பிரிவின்படி நாணயச் சபையின் கட்டளைக்கு இணங்க, வர்த்தக வங்கிகள் அல்லாத இரு வங்கித் தாபனங்களையும் பரிசோதனை செய்தது.

மேலும் இப்பகுதி, 1957ம் ஆண்டின் 42ம் இலக்க ''வங்கிப் பற்றுகள் வரிச் சட் டத்தை'' நடைமுறைக்குக் கொண்டுவருவது சம்பந்தமாகச் சில பணிகளையும் தொடர்ந்து ஆற்றிவந்தது.